# சடங்குகள் தொடர்பான ஆய்வுகளும், கண்டு பிடிப்புக்களும் மனித சமூகத்தினை வலுப்படுத்தும்.

செல்வி.சோ.ஞானசக்தி,

கலைகலாசாரபீடம், கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை .

sekarshakthi05@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கும்ப நிகழ்வு மக்களின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களுடன் ஒன்றிணைந்தே காணப்படுகின்றது. சமூகத்தின் வாழ்வியல் அம்சமான பண்பாடு, பழக்கவழக்கம், வழிபாட்டுமுறை, உணவு, மொழி, விளையாட்டு என அனைத்தினையும் ஒருங்கிணைத்து சமூகத்தினை வலுப்படுத்தும் பாரம்பரிய நிகழ்த்துகையாக விளங்குகின்றது. இது மனிதரின் வாழ்வியல் கூறுகளின் ஒன்று சேரும் மையமாகவும் காணப்படுகின்றது. கும்ப நிகழ்த்துகைக்கு கும்பம் என பெயர் வந்தமைக்கான காரணம் அதன் கட்டுமானத்தை மையப்படுத்தியதாக மாத்திரம் அல்ல மாறாக அது அச் சமூகத்தின் வாழ்வியல் அம்சங்கள் அனைத்தினையும் ஒருங்கிணைத்து கூட்டாக சேர்த்து வைத்ததனால் தான் இதனை கும்பம் எனவும் கொள்ளலாம். பண்பாட்டுக் கூறுகளால் மக்களின் நம்பிக்கையும் அதனுடனான வழிபாட்டு முறைமையும் இன்றியமையாததே எந்த சமூகமாக காணப்படினும் நம்பிக்கைக்குரிய வழிபாடு இன்றி சமூகக் கட்டமைப்பின் துரும்பும் அசையாது. இவ்வாறு நம்பிக்கையான தன்மை என்பதுடன் ஒருங்கிணைந்ததே கும்பச் சடங்கு முறையாகும்.

**திறவுச் சொற்கள்** - கும்பம், சடங்கு, பாரம்பரியம், சமூகம், வலுப்படுத்தல்

## 2. நோக்கம்

கும்பச்சடங்கின் நிகழ்த்தகை வெளியிலும், அதன் செயற்பாட்டு தளத்திலும் அதனோடு தொடர்புடைய சமூகத்தினை வலுப்படுத்தும் தன்மையினைக் கும்பச்சடங்கின் நிகழ்த்துகை தளத்தில் அவதாணிக்க முடிகின்றமையும். இவ்வாறான செயற்பாடுகளை ஆய்வின் மூலம் விளங்கிக்கொள்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 3. கருதுகோள்

திருகோணமலைப் பிரதேசத்திற்கு தனித்துவமாக காணப்படும் கும்பச்சடங்கானது அதனை நிகழ்த்துகின்ற சமூகத்தினை சடங்கின் நிகழ்த்துகையோடு அதுசார்ந்த செயற்பாடுகளோடு வலுப்படுத்தும் தன்மையும், இயல்பான சடங்கு நிகழ்த்துகை வெளியில் சிறுவர் தொடக்கம் முதியோர் வரையாக பல்வேறு ஆளுமை கொண்டவர்களாக ஆக்கிச் செல்கின்றது என கருதலாம்.

## 4. இலக்கிய மீளாய்வு

1. பாலசுகுமார், 2015, கும்பம் சேனையூர் ஒரு பண்பாட்டியல் குறிப்பு, அனாமிகா வெளியீடு, பக்கம் 9-31 மற்றும் 42-52 எனும் நூலில் கும்பச்சடங்கின் நிகழ்த்துகை பற்றி சிறு விளக்கத்தினை அறியக் கூடியதாக உள்ளது.

கும்பம் சேனையூர் ஒரு பண்பாட்டியல் குறிப்பு எனும் தலைப்பில் உள்ளடக்கங்களாக னேனையூர் அறிமுகம், சேனையூரும் கும்பமும், கும்பம் ஒரு பண்பாட்டியல் குறிப்பு, கட்டைபறிச்சானில் கும்பம், கல்லம்பாரில் கும்பம், மருதநகரில் கும்பம், தம்பலகாமத்தில் கும்பம், திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளிலும் நகரிலும் கும்ப விழா, பற்றிய மேலோட்டமான பார்வைகள் ஆசிரியரால் பார்க்கப்பட்டுள்ளது.

## 5. ஆய்வு முறையியல்

வரலாற்று முறையியல், விபரண முறையியல், ஒப்பீட்டு முறையியல் என்பனவற்றினூடாக பண்பு ரீதியான முறையியலையே பயன்படுத்தப் பட்டுள்ளது.

## 6. சடங்கு பற்றிய அறிமுகம்

திருகோணமலைப் பிரதேசத்திற்குத் தனித்துவமான பண்பாட்டின் முக்கிய கூறான வழிபாட்டு முறையில் கும்ப நிகழ்த்துகை இன்றியமையாததாக காணப்படுகின்றது. இக் கும்ப நிகழ்த்துகையானது திருகோணமலை நகர்புறங்களிலும் தம்பலகாமப் பிரதேசத்திலும் மற்றும் மூதூர் பிரதேசத்தில் கிழக்குப் பகுதியில் சேனையூர், கட்டைபறிச்சான் போன்ற கிராமங்களில் மிகவும் கோலாகரமானதாகவும், கொண்டாட்டத்திற்கு உரியதாகவும் காணப்படுகின்றமை பங்கு கொள் அவதானிப்பில் கண்டறியப்பட்டதே. இவ்வாறான கும்ப நிகழ்த்துகையில் மக்களின் வழிபாட்டு முறை சடங்கு சார்ந்ததாகவே தற்காலியமாக அமைக்கப்படும் மாலிலே (கொட்டகை) நடைபெறுகின்றது. இவ்வாறு அமைக்கப்படும் கும்பத்து மால் பச்சை தென்னம் மட்டையின் ஓலையினால் கூரையாக அடைக்கப்பட்டு தற்காலியமாக கட்டப்படும் இடமாக கும்பத்துமால் காணப்பட்டது. ஆனால் இன்று சிறு மாலாக கட்டிடத்தினால் கட்டப்பட்டு காணப்படுகின்றது.

கும்பச் சடங்கு பகல் பூராகவும் தயார் செய்யப்படும். இவ்வாறான பத்து நாள் சடங்காக கும்பச் சடங்கு காணப்படுகின்றது. மூன்று நாட்கள் துக்கைக்கும் அம் மூன்று நாளும் வீரத்தினை முன் நிறுத்தியும் தாம் வீரமாக இருப்பதனால் தம் தொழில் மற்றும் குடும்பம் சக உறவினர்கள் என அனைவரும் ஆரோக்கியமாகவும் திடகார்த்தமாகவும் வாழவும் துக்கையை முதல் மூன்று நாட்கள் வழிபடுவது கும்பச் சடங்கில் முக்கியமானதாக விளங்குகின்றது. அடுத்து மூன்று நாட்கள் இலட்சுமியை பிரதானமான தெய்வமாக நினைத்து வழிபடுவது வழக்கம். இவ்வாறு வழிபடுவதனால் தாமும் தம்மை சுற்றியிருக்கும் சுற்றத்தாரும் கஷ்ர துன்பங்கள் இன்றி சந்தோசமாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் இலட்சுமியை பிரதானப்படுத்தி வழிபடுகின்றனர். இவ்வாறு இறுதி மூன்று நாளும் சரஸ்வதியை மையப் படுத்தி கல்வியின் பெருமையை முதன்மைப் படுத்தி கல்வி தம் ஊரவருக்கு கல்விச் செல்வம் நிறைந்து தம் சமூகம் கல்வியறிவு நிறைந்த சமூகமாகத் திகழ வேண்டும் எனவும் எடுத்தியம்பும் சடங்காகவும் கும்பநிகழ்த்துகை காணப்படுகின்றது.

இவ்வாறு கும்பம் ஊருக்குள் ஊர்வலமாகும் பத்தாவது நாள் மாலை நேரம் அவ் ஊரே கொண்டாட்டத்திற்கானதாகவும், கோலாகரமானதாகவும் ஒன்றிணையும் இதில் அச் சமூகத்தில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என அனைவரும் பங்கு கொண்டு தம் அடி மனங்களுக்குள் புதைந்து கிடக்கும் மன அழுத்தங்களை மறந்து ஆடிப்பபாடி திரியும் கொண்டாட்டத்திற்கான வெளியாகவும் கும்பத்தின் ஊர்வலம் காணப்படுகின்றது.

**7. சமூகம் வலுப்படும் முறை**

கும்பம் வீட்டுக்கு வீடும், வீதிக்கு வீதியாகவும்  ஊர் வலம் நடைபெற்று முடியும். இவ்வாறு ஒரு வீட்டில் குறைந்தது பத்து நிமிடமாவது நின்று கொண்டாட்டமானதாகவும், மகிழ்வுக்குரியதாகவும் ஆடிக் கொண்டும் கும்ப பாடலை பாடிக் கொண்டும் பாடப்படுகின்ற பாடலுக்கு ஏற்ப்ப பறையும் வாசித்து மகிழ்ந்து கொண்டி கழிக்கும் இடமாகவும் காணப்படுகின்றது. இவ்வாறான கொண்டாட்ட ஊர்வலத்தில் இவருக்கு இவர் எதிரி என்ற எண்ணம் ஏற்படாது இங்கு யாருக்கும் யாரையும் தெரியாதவர் என்ற எண்ணமும் இவர்களுக்குள் ஏற்பட வாய்புக்களும் குறைவுதான். இவ்வாறாக கும்பம் ஊர்வலம் செல்லும் போது எல்லோரும் எல்லோரினதும் வீட்டுக்கு அமர்ந்து உண்டு குடித்து மகிழ்ந்து சந்தோசம் தெரிவித்தலும் இவ்வாறாக கும்பம் ஆரம்பித்து ஊர்வலம் முடியும் வரையிலாக வெளிநாட்டில் இருந்தும், வெளி பிரதேசங்களில் இருந்தும் உறவினர்கள் வீடுகளுக்கும் சென்றும் நலம் விசாரிப்பதும் கும்ப ஊர்வலத்திலே நடந்தேறும்.

இவ்வாறாக தம் உறவுகளின் நல்லது கெட்டதுக்கு போகாதவர்கள் கூட இவ்வாறான நேரங்களில் உறவினர் வீடுகளுக்கு சென்று நலம் விசாரித்து தமது உறுவுப் பாலத்தினையும் வலு சேர்க்கும் தன்மை கும்பத்தின் தனித்துவம் என்றும் கூறலாம். இவ்வாறு கும்பம் நிகழ்த்துகின்ற போது பலரின் திருமணங்களும் தீர்மானிக்கும் தன்மையும் காணப்படுகின்றது. மேலும் கும்பத்தில் கூட்டாக கை கோர்த்து திரியும் சிறுவர்களின் சுதந்திரமான வெளியாகவும் கும்ப ஊர்வலம் காணப்படுகின்றது.

வயது வந்தவர்கள் மற்றும் முதியவர்கள் தங்கள் பழைய நண்பர்களையும் சந்தித்து தங்கள் பழைய கதைகளையெல்லாம் அசை போடும் இடமாகவும், அன்றைய பொழுதுகளில் விடிய விடிய ஊர் சுத்தி அனைவரும் ஒரே தன்மையில் உயந்தோர் தாழ்ந்தோர் என்ற ஏற்றத் தாழ்வுகள் இன்றி உயந்த சாதி தாழ்வான சாதி என்ற தன்மையும் இன்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் தன்மை இப் பிரதேச கும்ப ஊர்வலத்துக்கு தனித்துவமானதே. கும்ப ஊர் வலத்தின் முக்கிய தன்மை கும்பம் ஊர் சுத்தி வரும் போது வீட்டு வாசலிலே நிறை குடம் வைத்து (நிறமுட்டி) விளக்கு வைத்து வரவேற்பதும் கும்ப ஊர்வலத்தில் வரும் அனைவருக்கும் தம்மால் இயன்ற உணவுப் பண்டங்களை செய்து கொடுத்து பரிமாறி இன்புறுவதும் கும்ப ஊர்வலத்தில் சிறப்பூட்டும் விடயமே. அன்றய பொழுதுகளில் சுமார் ஊர் சுற்றி வரும் வரையிலும் எது வித சாதி ஏற்றத் தாழ்வுகளும் இன்றி அனைவரும் ஆடிப் பாடி உண்டு மகிழ்ந்து கழிப்பதுவும் மக்களின் வாழ்வியலின் கூறாக விளங்குகின்றது.

கும்ப நிகழ்த்துகையில் அச் சமூக மக்களின் உணவுப் பண்பாடு பழக்க வழக்கம் வெளிப்படுத்தலையும் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறு இரவுப் பொழுதுகளில் உணவுப் பரிமாறுகின்ற போது கடலை, அவல், உழுந்து வடை, பாணக்கம், கொழுக்கட்டை, பாயாசம், உள்ளூர் மரக்கறி வகைகள் கொண்டதான மதிய உணவுகளும் என உள்ளூர் உணவுப் பாரம்பரியத்தினையும் காணக்கூடியதாக உள்ளது. இதனை கும்ப ஊர்வலத்தில் வரும் உறவினர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும், யார் என்றே தெரியாத அயலவர்களுக்கும் தாம் செய்த உணவுகளை மன மகிழ்வுடனும் சந்தோசமாக கொடுத்தும் பரிமாறும் தன்மையான இச் சமூக வருந்துபசாரத் தன்மையானது இக் கும்ப ஊர்வலத்தில் தனித்தவமாதே.

இக் கும்ப நிகழ்த்துகையில் வாழ்கைக்கு தேவையானதும், வாழ்கையோடு இனைந்ததுமான மனிதரை வாழ்க்கையோடு இனைந்தும் வாழவும் தேவையான கல்வி முறையினையும் அதற் கேற்ற விதத்திலான திறந்த வெளியிலான கற்பித்தல் முறையினையும் எமது பாரம்பரிய நிகழ்த்து கலையில் செறிந்து கிடக்கும் தன்மையானது இதன் தனித்துவமான பண்பேயாகும். கும்பத்தில் ஒவ்வொரு நிகழ்வினையும், ஒவ்வொரு செயற்பாட்டினையும், பார்த்தும், கேட்டும், பங்கு கொண்டும் கற்றுக் கள்ளும் தன்மையானது கும்ப நிகழ்வில் திறந்த வெளிக்கான கற்றல் செயற்பாடாகவும் பங்கு பற்றலினூடான கற்றல் வெளியாகவும் கும்பத்தின் வெளி திகழ்கின்றது.

இவ்வாறு சமூகத்தில் கும்பச்சடங்கு முதியவருக்கும், சிறியவருக்கும், இளைஞருக்குமானதும், பெண்களுக்குமாதுமாக பங்கு கொள் செயற்பாட்டினூடாக கும்பத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் பயன் தரும் கல்வியை கற்றுக் கொள்கின்றனர். அதாவது முதியவர்கள் தாம் பங்கு கொள் செயற்பாட்டினூடாக பெற்றக் கொண்ட அனுபவத்தினை அடுத்த தலை முறைக்கு சொல்லிக் கொடுப்பதனூடாக மீள ஞபகப் படுத்தியும் கொள்கின்றனர். அதனுனடாக புதிய புதிய கும்ப பாடல்களையும் கட்டிப்பாடி கும்பத்திற்கான புதிய பாடல் வடிவத்தினை அமைத்துக் கொள்கின்றனர்.

கும்பத்து நிகழ்வில் சிறுவர்களும் காத்திரமான கற்றலினை கற்றுக் கொள்கின்றனர். கும்பத்து வெளியில் கும்பத்து பாடல் பாடப்படுகின்றதனையும் பார்த்தும் கேட்டும் அதனை கூர்மையாக அவதானித்தும் கூட்டாக சொல்லித் தருவதனை மீண்டும் மீண்டும் பாடிப் பார்த்தும் பாடுபவர்களுடன் சேரந்து பாடியும் இலகுவில் கற்றுக் கொள்கின்றனர். சிறுவர்களை பொதுவாகவே கும்ப நிகழ்வில் எடு பிடிகளாகவும் இருந்து கும்பம் தொடர்பான அனைத்து விடையங்களையும் சாதாரணமாகவே கற்றுக் கொண்டு அடுத்த தலை முறைக்கு ஞாபகப்படுத்திக் கொள்ளும் முக்கிய பங்காளர்களாக சிறுவர்கள் விளங்குவதும் முக்கியமான விடயமே.

கும்ப நிகழ்வு இளைஞர்களின் தொடர்சியான பங்கு பற்றலினாலும் அர்பனிப்பினால் கொண்ட ஈடுபாட்டினாலும் கும்பத்தின் ஒவ்வொரு நிகழ்வின் தன்மையினையும் வடிவமைத்துக் கொள்கின்றனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் சிறுவர்களின் பங்களிப்பு அடுத்த தலைமுறைக்குரியதாக கடத்தப் படுகின்றது. இதில் பங்கு கொள்ளும் இளைஞராக இருக்கட்டும் சிறுவர்களாக இருக்கட்டும் கும்ப நிகழ்த்துகையில் எந்த வித கட்டுப்பாடுகளும் இன்றி அனைவரும் செயற்படும் இடமாக கும்பத்தின் வெளி காணப்படுகின்றது.

இத்தகு தன்மையில் இது சார்ந்த செயற்பாடுகளில் ஆர்வத்தடனும், உற்சாகத்துடனும் குதுகலத்துடனும் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் அனைத்து செயற்பாடுகளையும் கற்றுக் கொள்கின்றனர். இதில் கும்பம் ஆரம்பிப்பது முதல் முடியும் வரையாகவும் அனைத்து வேலைகளையும் கும்ப நிகழ்த்துகை சார்ந்தது கும்ப பாடல், மந்திரம், சடங்குகள் செய்யும்முறைகள் மற்றும் ஊர்வலத்தில் தாமாக பொறுப்புக்களை எடுத்து அதில் ஏற்படும் பிரச்சினைகளைத் தடுத்து முற்போக்கான தலைமைத்துவத்தினையும் பங்க கொள் அனுபவத்தினூடாக கற்றுக் கொள்கின்றனர். அதன் முலமாக இவர்கள் கற்றக் கொள்ளும் விடயம் ஆக்க பூர்வமானதாகவும் உயித்துடிப்புடனும் கூடிய அடுத்த தலைமுறைக்கு காவிச் செல்லும் அறிவ பூர்வமான வாழ்வியல் சின்னம் கும்பம் எனலாம். இவ்வாறான காத்திரமான கல்வியை, சிந்தனையை பாரம்பரிய கற்பிற்றல் முறையினூடாக சொல்லிக் கொடுத்தும், நிகழ்வில் பங்கு கொண்டும் கற்பிக்கும் தன்மையினை இவ்வாறான நிகழ்வினிலே காணக் கூடியதாக உள்ளது. (சிறுவர் குழுக்கலந்துரையாடல்)

எமது வாழ்வியலில் எமக்களித்த கூட்டுத் தன்மை கொண்டு அனைத்து வேலைகளையும் செய்யப் படுவதனையும் அவதானிக்கலாம். இவ்வாறு செய்யப்படும் அனைத்து வேலைகளும் வெளிப்படையான தன்மை கொண்டதுமாகவும் ஜனநாயகத் தன்மை கொண்டதுவாக மக்கள் மையம் கொண்டதுமாக காணப்படுகின்றது.

கும்பத்தில் சடங்கு சார்ந்த அனைத்து வேலைகளையும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என அனைவரினதும் பங்களிப்பு மிகையாகவே காணப்படும். மேலும் கும்பத்து மாலினை அலங்கரித்தல், உணவுப் பண்டங்களை செய்தல், கும்பத்தினை கட்டுதல், கும்பம் ஊருக்குள் சுற்றி வருதல், கரகம் ஊருக்குள் வளைத்தல், கும்பம் சொரிதல் என அனைத்தும் சமூகத்தில் சனநாயகத் தன்மையுடன் கூடிய கூட்டு வேலையாக காணப்படுகின்றது.

கும்பம் முடிந்து மறு நாள் மங்கள பூசை தாம் வாழும் தேசம் செல்வச் செழிப்பாக அமைய வேண்டும் என்பதற்காக இவ்வாற மங்கள பூசை செய்யப்படுகின்றது. இதனை அடுத்து சக்தி பூசை நடைபெறும் இதில் மக்கள் கும்பம் நடந்த பத்து நாட்களும் மச்சம் மாமிசம் எல்லாம் விடுத்து இருந்த மக்களுக்காகவும் வராகி அம்மாளை வேண்டி நடாத்துவார்கள். இவ்வாறு நிகழ்த்தப்படும் சக்தி பூசையில் மீன், இறைச்சி, முட்டை, பால், இறால், நண்டு, மதுபாணம் என அனைத்தினையும் படைத்து பின்பு தாமும் உண்டு மகிழுவர். இவ்வாறான சடங்கு முறையானது ஏனைய சடங்கு முறைகளில் இருந்து வேறுபட்டு காணப்படுகின்றது. (நேர்காணல்: க.சோமசேகரம்)

## 8. கும்ப கட்டுமானத்தின் வடிவமைப்பு

இவ்வாறு சமூகத்துடன் ஒன்றிணைந்து காணப்படும் கும்பச் சடங்கானது. அச் சமுகத்தின் வாழ்வியலினை பிரதி பலித்து நிற்கிறது. அத் தகு தன்மை மக்களின் அன்றாட வாழ்வியலினை எடுத்துக் காட்டும் முக்கிய பண்பாகவும் மக்களின் இயல்பான வாழ்கைக்கு ஒவ்வாத ஆகம வழிபாட்டு முறைக்கும் மக்களின் இயல்பான வாழ்கைக்கும் பொருத்தமற்ற வழிபாட்டு முறைக்கு எதிரான பண்பு கொண்டதும் மக்களின் உணர்வு பூர்வமான பண்பாட்டுத் தன்மை கொண்ட கும்ப நிகழ்த்துகையில் மக்களின் வாழ்வியலுக்கு தேவையான பண்புகளைக் கொண்டு வெளிப்பட்டு நிற்கின்றது.

கும்ப நிகழ்த்தகையில் கும்ப கட்டுமானம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த கும்ப கட்டுமானம் இரு நிலைகளைக் கொண்டதாக காணப்படுகின்றது. அதாவது பத்திரிக் கும்பம் என்ற வகையும் அடுத்து கடதாசி தாழ்களினால் செய்யப்படும் கும்பம் என இரு வகைப் படுகின்றது. இவ்வாறு வடிவமைக்கப்படும் கும்பம் தாம் வாழும் சூழலிருந்தே அதற்கு தேவையான பொருட்களை பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறாக வடிவமைக்கப்படும் கும்பம் தம் வாழ்வியலோடும் அது சார்ந்த தொழில் நுட்ப அறிவப் பின்புலமும் அது சார்த அழகியல் தன்மையும் கொண்டதாகவும் காணப்படும். (நேர்காணல்: க. ஜெகதீஸ்வரன்)

இவ்வாறு கும்பத்தினை செய்து வரும் சமூகத்திற்கும் அது சார்ந்த இயற்கைக்குமான புரிந்துணர்வு கொண்ட வாழ்வியலாக வாழ்வதும் அன்றைய எம் முன்னோர்களின் வாழ்க்கை பாரம்பரியம் எத்தகையான இயற்கை நேசிப்புத் தன்மை கொண்ட வாழ்க்கை முறையினை கும்ப நிகழ்த்தகையில் வாழ்ந்து அனுபவித்து அதன் ஒவ்வொரு கட்டத்தினையும் தம் அனுபவங்களை பதித்து அதன் பேறாகவே கும்பத்தின் கட்டுமானம் கும்பச் சடங்கின் அமைப்பியல் இரவு நேரத்தினைக் கொண்டதாகவும் கும்பம் ஊர் சுற்றும் தன்மையும் கிராமத்தில் உள்ள அனைவரின் வீடுகளுக்கும் சென்று மகிழ்வித்து வரும் தன்மை எனவும் இவ்வாறு வருபவர்கள் எந் நேரம் வந்தாலும் விருந்துபசாரம் செய்து ஆதரிக்கும் தனித்துவமான பண்பும் எம் முன்னோர்கள் எமக்கான இயற்கையுடன் இணைந்ததும் அனைவரையும் ஆதரிக்கும் வாழ்வியலினை தமக்குரியதான வாழ்க்கையாக வாழ்ந்து முடித்தமைக்கான ஆதாரமாகவும் நாம் கும்ப நிகழ்த்துகையினை காணலாம்.

## 9. தற்காலத்தில் கும்ப விழாவின் தேவை

இன்றைய நவ காலனித்துவச் சூழலில் நாம் ஒவ்வொருத்தரும் தனியன்களாகவும், கடனாளியாகவும் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருத்தரும் தமக்கான சிந்தனை, தமக்கான கற்பனை என்பவற்றை தோற்றுவிக்கும் அறிவுப் பின்புலம் என எதுவும் இல்லாதவர்களாகவும் வெறுமையான கைகளை மாத்திரம் திறந்து பார்க்க வைக்கும் இக் காலனித்துவ சிந்தனை எம் வாழ்வியலிலும் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியே விடுகின்றது. இத்தகைய காலனித்துவ சிந்தனை எமது கல்வி முறையிலும், கலாசாரத்திலும், மொழி, விளையாட்டு, பொழுது போக்கு, சிந்தனை, வழிபாட்டு முறையில் என்றதான வட்டத்திற்குள் சிக்குண்டவர்களாக நாம் அனைவரும் கறுப்புத் தோல் போர்த்துக் கொண்டு இருந்து சிந்தனை அளவில் வெள்ளைத் தோல் போர்த்துக் கொண்டிருக்கும் வெள்ளைக் காரர்களாக வாழ்ந்து கொண்டு வருகிறோம்.

உலகமயமாக்கலின் விளைவாக கனணி மயமாக்கலும் இலத்திரணியல் தாக்கமும் ஒருமனிதரின் சிந்தனையிலும், செயற்பாடுகளிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதுவே உண்மை. இத்தகைய தன்மையில் இருந்து விடுபட முடியாதவர்களாகவும் அதன் ஆதிக்க சிந்தனையில் இருந்தும் முதலாளித்துவ பொருளாதார ஆதிக்கத்தில் இருந்தும் விடுபட முடியாதவர்களாக காணப்படும் மனிதரின் சிந்தனையிலும், வாழ்வியல் கூறுகளிலும் புத்துணர்சி ஊட்டும் தன்மையான கொண்டாட்டத்திற்கானதாகவும், குதுகலத்துக்குமானதுமான கும்பம் தனியென்களாக சிக்குண்டு காணப்படும் மனிதரின் கூட்டு செயல் படைப்புக்கும் இக்காலத்தின் தேவையை; பூர்த்தி செய்யும் கும்ப நிகழ்த்துகையின் பங்கு பற்றல் இன்றியமையாததே.

இவ்வாறான ஆபத்தான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதரின் மனங்களின் இறுக்கங்களை உடைத்து சாதாரணமான இன்பமான வாழ்கைக்கு வழிகாட்டி மனிதர்கள் இக்கால நெருக்கடியான வாழ்விற்கும் இன்னொருவரின் தீர்மானங்களுக்கு அமைய செய்யப்படும் பண்டத்தினை விலை பேசி முடித்து உண்டு கழிக்கின்ற மனிதர்கள் மத்தியில் சுய ஆக்க செயற்பாட்டிற்கும் ஊக்கப் படுத்தும் பங்கு கொள் செயற்பாடே கும்ப நிகழ்த்துகையாகும்.

இவ்வாறாக எமது சுற்று சூழலில் இருந்து பெற்றுக் கொள்ளும் பொருட்களை வைத்துக்கொண்டு எமக்கான உற்பத்திப் பொருட்களை செய்து கொள்வதும், இவ்வாறான தன்மை கும்பத்தில் பத்திரிக் கும்பம்பத்தினை செய்வதனூடாக தமக்கு தேவையான பொருட்களை தாம் வாழும் சூழலில் இருந்தே பெற்றுக் கொண்டு நுகர்வுப் பண்பாட்டினுள் சிக்கி கையேந்திகளாக வாழாது. சுயாதினமான வாழ்க்கையை வாழ கும்பத்தின் தேவை பிரதானமாகின்றது. இத்துடன் இவ்வாறான காத்திரமான கும்பத்தினை தூக்கி ஆடும் உடல் வலிமையும் அச் சமூகத்தவர்களின் தொழில்களை மேற்கொள்ளவும் துணையாகவும் விளங்குகின்றது.

இன்றைய கல்விச் சூழலுக்கு பொருத்தமற்ற எழுதப்பட்ட அல்லது இன்னொருத்தரின் அறிவுப் பின்புலத்தை மாத்திரம் ஒப்பித்து வரும் தன்மையில் கல்வியை வடிவமைத்து வரும் இக் காலனித்துவ சிந்தனை மனிதர்களின் சுய சிந்தனைகளை மழுங்கடித்து சிந்திக்கத் தெரியாதவர்களாகவும், படிப்பறிவு அற்ற பாமரர்களாகவும் ஆக்கப்பட்டுக் கொண்டு வருகின்றமையும் சிந்திக்க வேண்டியதே. அந்த வகையில் கும்ப நிகழ்த்துகையில் கும்பத்தின் கட்டுமான அமைப்பும், கும்ப நிகழ்த்துகையிலும், ஒரு குறிப்பிட்ட சமூகம் தங்களுக்கான வாழ்வியலை பிரதிபலித்து விடுகின்ற தன்மையின் ஊடாக காலத்துவ சிந்தனை கேள்விக்குட்படுத்தப் படுகின்றது.

இவ்வாறான தன்மையில் கும்ப கட்டுமானத்தில் பயன்படுத்தும் மரங்களின் வகைகள், கும்பத்தின் அழகுக்காக பயன்படுத்தும் வண்ணத்தாழ்கள், அதனை வண்ண மயமாக்கும் கை வேலையின் அமைப்புக்கள் எனவும் கும்பத்தின் கட்டுமான உட்கூறுகளிலும் கைக் கொள்ளும் நுட்ப வேலைப்பாடுகள் என எல்லாமே இருப்பதை ஒவ்வொரு வருட கும்பத்திற்கும் ஒப்பிப்பதுவாக இருக்க மாட்டாது, மாறாக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு விதமான வடிவத்தினையும் கை வேலைப்பாடுகளையும் கொண்டதாக கும்பத்தின் கட்டுமானம் திகழ்கின்றது. இவ்வாறாக கும்ப கட்டுமானம் பெண்கள், ஆண்கள் இருபாலாராலும் தீர்மானிக்கப்படும். இங்கு கடதாசிக் கும்பம் கும்பத்துமாலில் கட்டப்படுவதும் இல்லை தனியாக வீடுகளில் கட்டப்படும் போது கனத்துக்கு கனம் கும்பகட்டுமான அமைப்பில் சிந்திக்கும் தன்மை கும்பசடங்கில் தனித்துவமானதே. (நேர்காணல்: க. ஜெகதீஸ்வரன்)

கும்ப நிகழ்த்துகையில் சமூகத்தில் உள்ள அனைவரையும் உள்வாங்கி அனைவருக்குமான படைப்பாக கும்பம் விளங்குகின்றது. அதாவது இன்றைய காலப்பகுதியில் வயது வந்தாலே முதியோர் இல்லங்கள் நிரப்பப்படும் காலத்தில் பாரம்பரிய கும்ப சடங்கில் அனுபவம் வாய்ந்தவர்களாக இச் சமூக முதியவர்கள் காணப்படுகின்றனர். இவர்களின் கருத்துக்ளை செவி சாய்த்து இளைஞர்கள் அனைத்து வேலைகளையும் செய்து கொண்டு வருவதும் இக் கும்ப கட்டுமானத்திலும், அலங்கரிப்பு வேலைகளிலும், நிகழ்த்துகையிலும் முதியோர்களும் தமது சுய ஆக்க செயற்பாடுகளில் தம்மை வளர்த்துக் கொள்ளும் திறந்த வெளியாகக் கும்ப நிகழ்த்துகைக்கான வெளி காணப்படுகின்றது. இதில் ஈடுபடும் ஒவ்வொருத்தரும் அந் நேரம் திறந்த மனத்துடன் சிந்திக்கும் தன்மையும் கற்பனை செய்யும் தன்மையும் கொண்டவர்களாகவும் எதுவுமே தெரியாதவர்களாக இருக்காது மற்றவருடன் சேர்ந்து தாமும் எந்தளவிக்கேனும் சேர்ந்து செயற்படும் தாற்பரியமும், வீரியமும் கொண்ட வெளியாக கும்பத்து மால் காணப்படுகின்றது.

கும்பத்துச் சடங்கில் கும்ப பாடலை அதன் இசைக்கு அமைய ஒருவர் சொல்லிக் கொடுக்க இன்னுமொரு குழுவினர் பாடுவதாகவும் காணப்படும். இது தருக்கள் சேர்ந்து வருவதனால் பாடலை பாடுவதற்கு இலகுவாக பாடலை பாட ஏற்றதாக காணப்படும். இங்கு இப்பாடல் பாடும் போது அச் சமூகத்தவர் அந்நேரம் தாமாக கட்டிப்பாடும் கற்பனைத் தன்மையும் ஊக்குவிக்கும் களமாகவும் காணப்படும். (நேர்காணல்: பா. இராசலெட்சுமி)

கும்ப நிகழ்த்துகையில் கலந்து கொள்வோர் விருப்புடன் ஈடுபடுவோராகவும், பக்தனாகவும், அச் சமூகத்தை சாந்தவராகவும், சிலவேளை விமர்சிப்பவனாகவும் காணப்படுகின்ற தன்மையிலும் கும்பத்து மாலினுள் இன்னுமொரு கும்பத்தோடு போட்டித் தன்மை ஏற்படுகின்ற போது கும்பத்து மாலின் அழகியலிலும், கும்பத்தினை வடிவமைப்பதிலும், கும்பத்துமால் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு முடியும் வரையாகவும் ஒன்றினைந்து செயற்படும் தன்மை இப்பாரம்பரிய கும்ப விழாவில் வலுச்சேர்க்கப்படும். இவ்வாறு பல்தரப்பட்ட சிந்தனையுடையவர்களையும்

இணைத்து செயற்படுகின்ற போது அதனால் ஏற்படும் பிணக்குகளை தவிர்த்து ஒன்று சேர்க்கும் கும்ப விழா நாம் வாழும் உலகமயமாக்கலில் சிக்கித் தவிக்கும் மனிதரின் உளவிருத்திக்கும், உடல் விருத்திக்கும் ஆரோக்கியமளளிக்கும் தன்மையையே கொண்டுள்ளது.

இக்காலகட்டத்தில் கும்பச்சடங்கின் தேவை மிகையாகவே காணப்படுகின்றது. பிறந்த குழந்தை முதல், வயது முதிர்ந்த முதியோரகள் வரையாக தொற்று நோய்களினாலும், தீரா நோய்களிளாலும் உயிரிழப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. இத்தகைய சூழலில் கும்பச்சடங்கானது மருத்துவ குணம் பொருந்திய வேப்பம் பத்திரத்திரத்தினால் கும்பத்தினை அலங்கரித்து ஊர் சுற்றுவதும், இவ்வாறாக கும்பம் நிகழும் போது பாணக்கம் என்னும் ஒரு வகையான பாணத்தினை அருந்துவதும் இவ்வாறு அருந்துவதால் தொற்று காச்சலில் இருந்தும் பாதுகாத்தும் கொள்ளலாம், இச்சடங்கில் தெய்வம் ஆடும் போது மந்திரம் கூறி தெய்வத்தினை வரவழைக்கும் போது அக்கணம் உடலில் நோய் எதிர்ப்புடன் கூடிய ஓமோன் சுரப்பி சுரக்கும் தன்மையும் காணப்படுகின்றது. இவ்வாறாக கும்பச்சடங்கில் இக் காலத்திற்கு தேவையானதாக விளங்குகின்றது. (நேர்காணல்: வி. கௌரிபாலன்)

இன்றைய இறுக்கமான கல்வி பின்புலத்தில் மாணவர்களை உடல்ரீதியாக நோய்வாய்பட்டவர்களாகவும், உள ரீதியாக கற்பனை ஆற்றலிலும், சுய சிந்தனையிலும், படைப்பாக்கத்திலும் இயலாமையானவர்களாக சிக்கி வைத்துக்கொண்டு இருக்கும்

மாணவர்களை, பாடசாலையில் புத்தக பூச்சுகளாக மூடி போட்டு மூடிக்கொண்டு ஒப்புவித்து கற்பிக்கப் படும் முறையானது அடைக்கப் பட்ட வகுப்பறையினுள் தலையாட்டிகளாக கற்பிக்கப்பட்டு வரும் பாடத் திட்டத்தினை கேள்விக்கு உட்படுத்தி கும்பத்துமாலில் திறந்த வெளியில் எளிமையாகவும், கூட்டாகவும், ஒத்துழைப்புடனும், விட்டுக் கொடுப்புடனும் ஒருவருக்கொருவர் கருத்துக்களையும், சிந்தனைகளையும் பரிமாறி விளையாட்டாகவும் மகிழ்ச்சிக்கான கொண்டாட்டமாகவும் கற்றலை கற்றுக் கொள்ளும் திறந்த வெளியாக கும்பத்து வெளி திறந்த வெளியாக காணப்படுகின்றமை எமது பாரம்பரியத்துடன் பார்த்தும், கேட்டும், பங்கு பற்றியும் கற்றலை கற்றுக் கொள்ளும் தன்மையானது இக் காலனித்துவ சமூக கட்டமைப்பில் இருந்து விடுபடுவதற்குமான வெளியாக இக் காலத்தின் தேவையாக கும்ப விழா விளங்குகின்றது.

இன்றைய காலத்தின் போக்குக்கும், தனி மனிதரின் சுய ஆக்கத்தினை மேம்படுத்தவும் பல் சமூகங்களின் கூட்டு முயற்சியாக நிகழ்த்து கழத்தில் இணைந்து செயற்பட கும்பம் காத்திரமான பங்கு வகிக்கின்றது. கும்ப நிகழ்வில் தனித்து ஒருவரின் செயற்பாட்டில் முக்கியத்துவம் பலரின் ஒன்றிணைப்பினால் பல்பரிமான கலந்துரையாடலினால் பூரணத்துவம் கொண்டு நிறைவு பெறும். இவ்வாறான கலந்துரையாடலும் கலந்துரையாடலுடனான பங்கு கொள் செயற்பாடுகளும் இவ்வாறான செயற்பாடுகளினூடாக கற்றக் கொள்ளும் செயல்வாத கற்கையும் அதனூடாக பெற்றுக் கொள்ளும் அனுபமும் சமகாலத்தின் வாழ்க்கை முறைமைக்கும் சமூகத்தில் வாழும் மனிதர்களின் மனதை ஆற்றப் படுத்தவும் சுயநலம் இன்றி கூட்டான வாழ்க்கைக்கு வழி காட்டும் பாரம்பரிய நிகழ்த்துகை இக்காலத்திற்கு தேவையானதே. (ஆய்வாளரின் நேரடி அவதானம்)

**10. முடிவுரை**

இவ்வாறான வீரியமுடைய கும்பச் சடங்கு இன்றைய நவகாலனித்துவ சூழலில் எம்மை எம் இயல்பான வாழ்க்கை முறைமையில் இருந்து தூரப்படுத்தும் வாழ்க்கை முறையில் இருந்து எம்மை விடுவித்து நாம் ஒவ்வொருத்தரும் வாழுகின்ற வாழ்க்கையில் இருந்து எம்மை விடுவித்து அடுத்த தலைமுறையினரின் எதிர்கால வாழ்க்கைக்காகவும் எமக்கான சிந்தனை மரபின் அறிவுப் பின் புலத்தின் வெளிக் கொணரலாகவும் வாழும் தன்மையை கற்பித்து மீட்டுப் பார்க்கும் மீள் பார்வை கொண்ட நிகழ்த்துகையாகவும் கும்பச் சடங்கு விளங்கு கின்றது.

திறந்த வெளியில் கூட்டான ஒன்றிணைப்பினை வலுப்படுத்தும் நிகழ்த்துகையாக கும்பம் திகழ்கின்றது. கும்பத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தனி மனித சுய அக்கத்தினுடனான கூட்டு செயல் படைப்பாகவே காணப்படுகின்றது. இவ்வாறாக வேலைகளை செய்யும் போது மற்றவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்புக் கொடுத்து அனுபவம் வாய்ந்த முதியவர்களின் சிந்தனைக்கும், அனுபவங்களையும் முதன்மைப் படுத்தி ஒவ்வொரு செயல் படைப்புகளையும் கற்றுக் கொள்ளும் களமாகவும் காணப்படுகின்றது. இதன் வெளி கும்பத்து மாலுடன் நின்று விடாது கும்பத்தினை நிகழ்த்தும் சமூகத்துடனான செயல் வாத பயனமாக வளர்ந்து கொண்டு செல்கின்றது.

**11. உசாவியவை**


1. பாலசுகுமார், 2010, கொட்டியாரம் இலக்கிய மரபு, அனாமிகா வெளியீடு.
2. பாலசுகுமார், 2015, கும்பம் சேனையூர் ஒரு பண்பாட்டியல் குறிப்பு, அனாமிகா வெளியீடு.
3. ஜெயாகரன்.பு, 2015, பொலி இதழ்.


**13. நேர்காணல்**

ஆய்வுக்கான முதல் நிலை தரவான நேர்காணலில் நேர்கண்டவரின் பெயர், தொழில், இடம், வயது, தரவுகள் பெற்றுக்கொண்ட திகதி என்பன குறிப்பிடப்பட்டுள்ளது.

01. சோமசேகரம்.க, வர்ணகுல விநாயகர் மணியகாரர், கட்டைபறிச்சான், வயது - 62, 05.08.2017.
02. ஜெகதீஸ்வரன்.க, சேனையூர் கும்பத்துமால் ஆலய உறுப்பினர், சேனையூர், வயது- 50, 05.08.2017.
03. ஜெயசீலன்.நா, கும்பம் கட்டும் தொழில் முறைக் கலைஞர், கணேசபுரம், வயது- 32, 15.08.2017.
04. இராசலெட்சுமி.ப, சேனையூர், வயது- 71, 21.08.2017.
05. விஜேயகுமார். த, மின்சார சபை வெளிக்கள உத்தியோகத்தர், சேனையூர், வயது- 33, 07.09.2017.
06. கௌரிபாலன்.வி, களுதாவளை முன்னால் முகாமைத்துவ உதவியாளர், குருக்கள்மடம், வயது- 48, 09.09.2017